செ.வெ. எண்: 65 நாள்: 30.09.2024

**தேனி மாவட்டம்**

**சுருளி சாரல் திருவிழா–2024 மூன்றாம் நாள் கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது,**

-----------

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட சுருளி அருவியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நடத்தும் தென்றல் தவழும் சுருளி சாரல் திருவிழா மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 28.09.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, பல்வேறு கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளுடன் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழா 02.10.2024 வரை நடைபெறும்

இரண்டாம் நாளான நேற்று (29.09.2024) கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் வளர்ப்பு நாய்கள் கண்காட்சி, ஜவஹர் சிறுவர்மன்றத்தின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுத்துறையின் சார்பில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் சுற்றுலாத்துறையின் சார்பில் மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

ஐந்து நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் மூன்றாம் நாளான இன்று (30.09.2024) போடிநாயக்கனூர் ஏல விவசாயிகள் சங்க கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், மாவட்ட சமூக நலத்துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் குழந்தை திருமணம், பாலியல் பிரச்சனைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி, சிலம்பாட்டம் மற்றும் அரசு செவிலியர் கல்லூரி மாணவிகளின் வில்லுபாட்டு பெண்கள் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மேலும், பள்ளிக்கல்வித்துறை சார்பாக பரத நாட்டியம் கலை நிகழ்ச்சி விமர்சியாக நடைபெற்றது. பல்வேறு விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டது. அதில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மிகுந்த ஆர்வமுடன் பங்கேற்றனர்.

சிறுதானியத்தின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மகளிர் திட்டம் உறுப்பினர்கள் மூலம் சிறந்த முறையில் தயார் செய்யப்பட்ட சிறுதானிய உணவுப்பொருட்களையும் மற்றும் கைவினைப் பொருட்களையும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் வாங்கி சென்றனர்.

மேலும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சி மற்றும் சுற்றுலாத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம், சுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, சமூகநலத்துறை, போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த விழிப்புணர்வு கண்காட்சிகளை சுற்றுலா பயணிகளும், மாணவர்களும் பார்வையிட்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.